செ.வெ.எண்45/2017 நாள்:15.09.2017

**சிவகங்கை மாவட்டம்**

**2017 வடகிழக்கு பருவமழையின் காரணமாக வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களில் வெள்ளத் தடுப்பு முன்னேற்பாடுப் பணிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் பார்வையிட்டு ஆய்வு.**





விரகனூர் அணையில் சிவகங்கை மாவட்டத்திற்கு செல்லக்கூடிய வலது மற்றும் இடது பிரதான கால்வாய்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வெள்ளக் காலங்களில் சேதம் ஏற்படாதவாறு செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளான கால்வாய் தூர்வாருதல், சிறு சிறு உடைப்புகளை சரிசெய்தல், கண்மாயில் உள்ள மடைகளை பழுது நீக்குதல் மற்றும் கடந்த காலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சீரமைப்பு செய்ய வேண்டிய இடங்களான தட்டான்குளம் பிரதான மற்றும் மணலூர் அருகே திருப்புவனம் வரத்துக் கால்வாயை தூர்வாருமாறும், மணலூர் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் கட்டப்பட்ட பாலத்தின் அருகே வலது பிரதானக் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அகற்றுமாறு பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், மானாமதுரை தாலுகா வேலூரில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் தரைப் பாலத்தை பார்வையிட்டு, பாலத்தின் இருபக்கத்திலுள்ள முட்செடிகள் போன்றவற்றை அகற்றுமாறு நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் திரு.மோகனகாந்தி, பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் (சருகனியாறு) திரு.வெங்கட்ராமன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, உதவி செயற் பொறியாளர் திரு.ரமேஷ், உதவிப் பொறியாளர் திரு.மோகன் குமார், திருப்புவனம் வட்டாட்சியர் திருமதி.கமலம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.